Madurai Super-Market.

*467 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether the Super Market at Madurai has earned profits during 1972–73 ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : லாபம் இல்லாமல் நடப்பதற்குக் காரணம் என்ன ? அது அமைக்கப்பட்டிருக்கிற இடம் சரியில்லையா ? வேறு இடத்திற்கு மாற்றப்பட யோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சரியான முறையில் நிர்வாகம் நடைபெறவில்லை என்று 67-ல் கலைக்கப்பட்டது. இப்போது கடந்த ஐந்தாறு மாதங்காளாக கணிசமான வியாபாரம் நடைபெறுகிறது. நானே ஒரு நாள் மாலையில் ஒரு மணி நேரம் உட்கார்ந்து பார்த்தேன். மாதம் 2 லட்சம் என்பது 12 லட்சத்திற்கு வியாபாரம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. தனியாகவே வேறு ஒரு இடம் வாங்கி கட்டிடம் கட்டுவதற்கு யோசனை நடந்துக்கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: சிறப்பு அங்காடியில் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால்தான், வியாபாரம் குறைந்து, அது கலைக்கப்படுகிற நிலை வருகிறது. அப்படியின்றி சிறப்பு அங்காடியில் குறைந்த அளவில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கனம் உறுப்பினர் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். அங்கேயுள்ள சிறப்பு அங்காடியில்தான் லட்சக்கணக்கான மக்கள் வாங்குகிறார்கள். அது லாபகரமாக நடைபெறுகிற அங்காடியாகும். சிறப்பு அங்காடியில் விலை அதிகம் என்கிற பிரச்சாரம் தனியார் செய்கிற வியாபார தந்திரமேயல்லாமல், எந்தச் சிறப்பு அங்காடியிலும் விலை அதிகம் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : நியாயமான விலையில் கொடுக்கப்படுவதாலும், மக்கள் அங்கே சென்று விரும்பி வாங்குவதாலும்—அரசாங்கம் அதிகமான சிறப்பு அங்காடிகளை ஏற்படுத்த ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பலயிடங்களில் விஸ்தரிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. த. சோணையா : மதுரையில் நடைபெறுகிற சிறப்பு அங்காடி 73–74-இல் அதிகப்படியான லாபத்தைப் பெற்று நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஜனங்கள் உள்ளே சென்று வாங்குவதில் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. அந்தக் கட்டிடத்தை விரிவுபடுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் முதலிலேயே சொன்னேன். மக்கள் அதிகமாக அங்கே வருகிறார்கள் என்பதை நானே அங்கு ஒரு 2 மணி நேரம் உட்கார்ந்து பார்த்தேன். இப்போது தனியாகக் கட்டிடம் கட்ட, புதிய இடத்தைப் பார்த்துக் கொண்டிருக் கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தனி நபர்களிடம் வாங்குகிறபோது சேல்ஸ் டாக்ஸ் இல்லாது பில் போடச் சொல்கிறோம். சிறப்பு அங்காடியில் அது நடக்காது. ஆகவே இங்கே சிறப்பு அங்காடியில் சேல்ஸ் டாக்சுக்கு எக்சம்ஷன் கொடுத்தால் இன்னும் அதிக அளவுக்கு வியாபாரம் இருக் குமே, இதை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்த இலாக்கா என்னிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வி 468.

திரு. சோ. அழகர்சாமி: சார், நான் முன்பு இருந்தே கையை உயர்த்திக் கொண்டிருக்கிறேன். ஒரு கேள்வி போடக்கூட எனக்கு அனுமதி கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுப் பது என்பது இயலாத காரியம். வேண்டுமென்றால் கேள்வி நேரத்தை 1½ மணியாக அதிகப்படுத்துங்கள். இல்லையென்றால் எல்லாக் கேள்வி களும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றால், எல்லோருக்கும் துணைக் கேள்வி போட சந்தர்ப்பம் அளிப்பது முடியாத காரியம்.

பூங்கா நகர் கூட்டுறவு பண்டகசாலை.

* 468 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) சென்னை பூங்காநகர் "கூட்டுறவு மொத்த விற்பனை" பண்டகசாலை எப்போது துவக்கப்பட்டது?

(இ) 1970–71-ல் அதில் ஏற்பட்ட லாபத்தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:

(அ) 1964-ம் ஆண்டில்.

(இ) 1970–71-ல் நட்டத்தில் இயங்கியது.

திரு. எம். சுரேந்திரன்: பூங்காநகர் மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலையில் 40 லட்சம் நட்டம் வந்திருப்பதாகச் சொல்கிறார்களே, நட்டத்திற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை, குறைந்த சம்பளத்தில் வேலை செய்கிறவர்களது கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டிருக்கிறது என்பது உண்மைதானா?